| | |
|---|---|
| **விதை நேர்த்தி** | கீழ்க்கண்ட ஏதேனும் ஒரு மருந்துடன் விதைநேர்த்தி செய்யவும் (ஒரு கிலோ விதைக்கு)<br><br>திரம் 4 கி, மேன்கோசெப் 4 கி, கார்பாக்சின் 2 கி, கார்பன்டாசிம் 2 கி, *டிரைக்கோடெர்மா விரிடி* 4 கி, *சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ்* 10 கி |
| **நோய்களின் பெயர்** | **கட்டுப்படுத்தும் முறை** |
| **துரு நோய்**<br>*பக்சினியா அராகிடிஸ்* | கீழ்க்கண்ட ஏதாவது ஒரு பூசணக் கொல்லி தெளிக்கவும் (ஹெக்டேருக்கு)<br>மேன்கோசெப் 1000 கி, குளோரோதலோனில் 1000கி, நனையும் கந்தகம் 2500 கி, டிரைடிமார்ஃ 500 கி<br>நோயின் தீவிரத்தைப் பொறுத்து, 15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும். |
| **முன்பருவ இலைப்புள்ளி நோய்**<br>*செர்கோஸ்போரா அராகிடிகோலா* பின்பருவ இலைப்புள்ளி நோய்<br>(*மைக்கோஸ்பியரெல்லா அராகிடிஸ்*) | கீழ்க்கண்ட பூசணக் கொல்லிகளில் ஏதாவது ஒன்றைத் தெளிக்கவும் ஒரு எக்டருக்கு<br>கார்பன்டாசிம் 500 கிராம் (அ)<br>மேன்கோசெப் 1000 கிராம் (அ)<br>குளோரோதலோனில் 1000 கிராம்,<br>தேவையெனில் பதினைந்து நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்கவும். |
| **துரு மற்றும் இலைப்புள்ளி நோய்** | கீழ்க்கண்ட ஏதாவது ஒரு பூசணக் கொல்லி தெளிக்கவும்.<br>**தாவரப் பொருட்கள்**<br>எருக்கு இலைச்சாறு 10 சதம் தெளிக்கவும்<br>கார்பன்டாசிம் 250கிராம் + மேன்கோசெப் 1000 கிராம் (அ)<br>குளோரோதலோனில் 1000 கிராம், தேவையெனில் பதினைந்து நாட்கள் கழித்து மீண்டும் ஒரு முறை தெளிக்கவும். |
| **வேரழுகல்**<br>*மேக்ரோபோமினாஃபேசியோலினா*<br>*ரைசோக்டோனியா படாடிகோலா* | **உயிரியல் முறை**<br>*ஒரு எக்டருக்கு சூடோமோனாஸ் ஃபுளூரசன்ஸ்* 2.5 கிலோவுடன் 50 கிலோ நன்கு மக்கிய தொழுவுரம் (அ) மணல் கலந்து மண்ணில் இடுதல்<br>**பூஞ்சாணக் கொல்லிகள்**<br>நோய் தென்படும் இடங்களில் கார்பன்டாசிம் 1 கிராம்/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |

| | |
|---|---|
| **நிலக்கடலை மொட்டுக் கருகல்** (நிலக்கடலை மொட்டுக்கருகல் நச்சுயிரி நோய்)<br>காரணி *திரிப்ஸ் டபாசி*<br>*ப்ரேங்க்லீனியெல்லா சுல்சி* | விதைத்து 6 வாரங்களுக்குப்பின் நோய் தாக்கப்பட்ட செடிகளை அகற்றி மோனோகுரோட்டோபாஸ் 36 டபுள்யூ.எஸ்.சி ஒரு ஹெக்டரேக்கு 500 மிலி தனியாகவோ அல்லது எதிர் நச்சுயிரியுடனோ கலந்து தெளிக்கவும்<br>**தென்னை அல்லது சோள இலைகளிலிருந்து எதிர் நச்சுயிரி சாறு எடுக்கும் முறை**<br>தென்னை அல்லது சோள இலைகளைக் காய வைத்து, சிறு சிறு துண்டுகளாக வெட்டிய பின் தூளாக்கவும்.<br>ஒரு கிலோ இலைத் தூளுடன் 2 லிட்டர் தண்ணீர் கலந்து 60°C கொதிநிலையில் ஒரு மணி நேரம் கொதிக்க வைக்கவும். பின்னர் மெல்லிய துணி கொண்டு வடிகட்டி 10 லிட்டர் தண்ணீர் கலந்து தெளிக்கவும். ஒரு ஹெக்டேருக்கு தெளிக்க 500 லிட்டர் தேவைப்படும். விதைத்த 10 மற்றும் 20-வது நாட்களில் இரண்டு முறை தெளிக்கவும். |